DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.31-2023**

Prosecution **PW.5**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சண்முகம் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | பிச்சை | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2025

A2, 3 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கிருஷ்ணராயபுரம் வட்டம் கண்ணமுத்தாம்பட்டியில் வீரியப்பாளையத்தில குடியிருந்து விசாலாட்சி ஓட்டலில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசர் மற்றும் இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் கௌதம் என்பவர் கையெழுத்து செய்தார். 26.01.2023ம் தேதி மாலை 06.00 மணியளவில் போலிசார் சம்பவ இடமான ஓட்டலில் நடந்த பிரச்சனை சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர் சம்பவ இடத்தில் தயார் செய்த வரைபடம் வரைந்ததற்கான தயார் செய்த பார்வை மகஜரில் நானும் கௌதமும் கையெழுத்து செய்து கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் பிரச்சனை என்று எழுதியிருந்தது. வரைபடத்தை நான் பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். அங்கு கடைகள் ஓட்டிஒட்டி இடைவெளியில் இல்லாமல் உள்ளது என்றால் சரிதான். மேப் வரைந்த போதும்

கடைகளை ஒட்டி ஒட்டிதான் போட்டிருந்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் கடைகளுக்கு இடைவெளிவிட்டு உள்ளது என்றால் சரிதான். போலிசார் சம்பவ இடத்திற்கு வரவில்லையென்றாலும், மாதிரிவரைபடம், பார்வைமகஜர் தயார் செய்யவில்லையென்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயார்செய்துள்ளார்கள் என்றாலும் எனது உரிமையாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2025.08.22 10:11:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.